பிரசார் பாரதி

அகில இந்தய வானொலி, சென்னை-4

22 08 2026 SATURDAY 12 40 PM ஆகாஷ்வாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

- புதிய குற்றவியல் சட்டங்கள், குறித்த காலத்திற்குள் நீதி கிடைப்பதை உறுதி செய்யும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.
- பிஜேபி புதிய நிர்வாகிகளின் அறிமுக கூட்டம், அக்கட்சியின் தலைவர் திரு. நிதின் நபின் தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.
- தேசிய நல்லாசிரியர் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழகத்தைச் சேர்ந்த திரு. தங்கராஜ் மற்றும் திருமதி. அமுதாவுக்கு முதலமைச்சர் திரு. விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார்.
- பொருளாதார ஒத்துழைப்பை பரஸ்பரம் வலுப்படுத்துவதென இந்தியாவும், ஃபின்லாந்தும் முடிவு செய்துள்ளன.
- 20 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கம் வென்றது.

>>>>>><<<<<<

புதிய குற்றவியல் சட்டங்கள், குறித்த காலத்திற்குள் நீதி கிடைப்பதை உறுதி செய்யும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

மேற்குவங்க மாநிலம், சிலிகுரியில் புதிய குற்றவியல் சட்டங்கள் தொடர்பான கண்காட்சியை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

புதிய குற்றவியல் சட்டங்கள் தொடர்பான அனைத்து அம்சங்களையும் எடுத்துரைக்கும் வகையில் இந்த கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

செல்வி மம்தா பானர்ஜி தலைமையிலான முந்தைய அரசு, இந்த சட்டங்களை மேற்குவங்கத்தில் செயல்படுத்தாமல் தாமதித்ததையும் அவர் சுட்டிக்காட்டினார்.

நீதித்துறை மற்றும் காவல்துறையைச் சேர்ந்தவர்கள் இந்த கண்காட்சியை பார்வையிட வேண்டும் என்றும் திரு. அமித் ஷா கேட்டுக் கொண்டார்.

>>>>>><<<<<<

மக்கள் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு செயல்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி அரசுக்கு எதிராக தவறான குற்றச்சாட்டுகளை தெரிவித்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

இது போன்ற நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு அடிபணியாது என்றும் திரு. கிரிராஜ் சிங் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

ஒடிசாவில் உள்ள Paradip துறைமுகம் 15 கோடி மெட்ரிக் டன் சரக்குகளை கையாண்டு சாதனை படைத்துள்ளதாக கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார்.

Paradip துறைமுகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 50 கோடி மெட்ரிக் டன் சரக்குகளை கையாள இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

இதனை கருத்தில் கொண்டு இந்த துறைமுகத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

திரைப்படத் துறையின் வளர்ச்சிக்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

கோவாவில் நடைபெறவுள்ள சர்வதேச திரைப்பட விழாவிற்கான ஏற்பாடுகள் குறித்து புதுதில்லியில் நடைபெற்ற அதற்கான வழிகாட்டுக் குழுவின் முதலாவது கூட்டத்திற்கு தலைமை வகித்து அவர் பேசினார்.

இளம் படைப்பாளிகளுக்கு இந்த திரைப்பட விழா வாய்ப்புகளை வழங்கி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

உலக அளவிலான சிறந்த திரைப்படங்கள் இந்த விழாவில் திரையிடப்படவுள்ளதாகவும் டாக்டர் எல். முருகன் கூறினார்.

இந்த திரைப்பட விழா கோவாவில், நவம்பர் 20ஆம் தேதி தொடங்கி 28ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

>>>>>><<<<<<

பிஜேபின் புதிய நிர்வாகிகள் அறிமுக கூட்டம், அக்கட்சியின் தலைவர் திரு. நிதின் நபின் தலைமையில் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

புதிய நிர்வாகிகள் நியமனத்திற்குப் பின்னர் நடைபெறும் இந்த முதலாவது கூட்டத்தில், கட்சியின் வளர்ச்சிப் பணிகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

பிரிக்ஸ் நாடுகளின் சட்ட அமைப்புக் கூட்டம், புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு. சூர்யகாந்த் இதில் பங்கேற்றார்.

சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவதற்கான நெறிமுறைகள் குறித்தும், நீதி துறையின் செயல்பாடுகளில் புதிய கண்டுபிடிப்புகள் குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

>>>>>><<<<<<

இந்தியா - இங்கிலாந்து இடையேயான பாதுகாப்பு ஆலோசனைக் குழுக் கூட்டம் புதுதில்லியில் நடைபெற்றது.

பாதுகாப்புத் துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

>>>>>><<<<<<

தேசிய நல்லாசிரியர் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டள்ள தமிழகத்தைச் சேர்ந்த திரு. தங்கராஜ் மற்றும் திருமதி. அமுதாவிற்கு முதலமைச்சர் திரு. விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், புதுமையான கற்பித்தல் முறை மற்றும் மாணவர்களின் நலன் மீது கொண்ட அக்கறைக்கு கிடைத்த அங்கீகாரம் இது என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த விருது, தமிழகத்தின் கல்வி சிறப்புக்கும், ஆசிரியர் சமூகத்திற்கும் பெருமை சேர்ப்பதாகவும் திரு. விஜய் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, இந்த விருது தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது பெருமை அளிப்பதாக உள்ளது என்று தென்காசி மாவட்டம், புளியம்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி ஆசிரியர் திரு. தங்கராஜ் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - தங்கராஜ் 40 செகண்ட்ஸ்)

இதேபோல், இந்த விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மதுரை பிஎம்-ஸ்ரீ கேந்திரிய வித்யாலயா பள்ளியின் தலைமைஆசிரியை திருமதி. அமுதா, ஆசிரியர் பணியை சிறப்பாக மேற்கொள்ள உறுதுணையாக இருந்த அனைவருக்கும் இந்த தருணத்தில் நன்றி தெரிவித்துக் கொள்வதாக எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - அமுதா 48 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

தெலங்கானாவில் மருந்து உற்பத்தி தொழிற்சாலையில் நேரிட்ட வெடிவிபத்தில் 2 பேர் உயிரிழந்தனர்.

Yadadri Bhuvanagiri மாவட்டத்திற்கு உட்பட்ட Pochampally-யில் செயல்பட்டு வரும் இந்த தனியார் மருந்து உற்பத்தி தொழிற்சாலையில், ஊழியர்கள் பணிமாற்றத்தின் போது, இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

அந்த உற்பத்திப் பிரிவில் உள்ள உலையில் ஏற்பட்ட தீ காரணமாக, இந்த வெடிவிபத்து நேரிட்டதாகவும், இதில் காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

ராஜஸ்தானில் நேரிட்ட சாலை விபத்தில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் உயிரிழந்தனர்.

ஜெய்ப்பூர் அருகே, உணவு தானியங்களை சாலையில் காயவைத்துக் கொண்டிருந்தவர்கள் மீது கார் மோதியதில் அவர்கள் உயிரிழந்ததாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

>>>>>><<<<<<

பொருளாதார ஒத்துழைப்பை பரஸ்பரம் வலுப்படுத்துவதென இந்தியாவும், ஃபின்லாந்தும் முடிவு செய்துள்ளன.

புதுதில்லியில் நடைபெற்ற இரு நாடுகளுக்கு இடையேயான தொழில்துறை ஒத்துழைப்பு கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

வர்த்தக வாய்ப்புகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது என்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

>>>>>><<<<<<

20 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கம் வென்றது.

Slovakia-வின் Bratislava-வில் நடைபெற்று வரும் இப்போட்டியின், மகளிர் 68 கிலோ எடைப்பிரிவில் Mansi Lather வெள்ளிப்பதக்கம் வென்றார்.

57 கிலோ எடைப்பிரிவில் Tanvi Magdum-ம், 59 கிலோ எடைப்பிரிவில் Komal-ம் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

>>>>>><<<<<<

உலக ஜூனியர் உபகரணங்களுடன் கூடிய வலு தூக்கும் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Madhura Kar தங்கப்பதக்கம் வென்றார்.

தென்னாப்பிரிக்காவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் சப்ஜூனியர் 52 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>>>><<<<<<

சிங்கப்பூர் சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Tanvi Patri இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 21-14, 21-8 என்ற செட்கணக்கில் சிங்கப்பூரின் Yue Yann Jaslyn Hooi-யை வென்றார்.

>>>>>><<<<<<

Cancun சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி - அனிருத் சந்திரசேகர் இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 4-6, 7-5, 12-10 என்ற செட்கணக்கில் இங்கிலாந்தின் Marcus Willis - David Stevenson இணையை வென்றது.

>>>>>><<<<<<

உலக கோப்பை ஹாக்கிப் போட்டியின் ஆடவர் பிரிவில், இந்தியா - நெதர்லாந்து இடையேயான ஆட்டம், நெதர்லாந்தின் Amstelveen-ல் இன்று நடைபெறுகிறது.

>>>>>><<<<<<